[2017 ஜூலை 14

204—

துணை மின் நிலையம்

***13540—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை சாலைப் போக்குவரத்து நிறுவன மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளவாறு IRTT *மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக 2.89 ஏக்கர் நிலத்தைத் தருவதாக* IRTT *மருத்துவக் கல்லூரி நிருவாகம் ஒப்புதல் அளித்திருக்கிறது. நிலம் கையகப்படுத்தும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அப்பணி முடிவடைந்தவுடன் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்த தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நினைத்து வணங்குகிறேன். ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு காலியிடம் இருக்கிறது. அதிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தேன். இந்தக் காலியிடத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறப்பு இருக்கிறது. இந்தப் பகுதியைச் சுற்றியிருக்கக்கூடிய இரண்டு பேரூராட்சிகளான பெருந்துறை மற்றும் கருமாடி சிலுவப்பாளையம் ஆகிய பகுதிகள்

2017 ஜூலை 14]

மிக வேகமாக வளர்ந்துவரும் பேரூராட்சிப் பகுதிகளாகும். இதனையொட்டி ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. இந்த மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், பூக்களுக்கெல்லாம் புன்னகையைக் கற்றுக் கொடுத்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தொழிலாளர்களுடைய பங்குகளை மூலதனமாகக் கொண்டு போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோருடைய குழந்தைகள் மருத்துவக் கல்வி பயிலவேண்டுமென்ற தொலைநோக்கு சிந்தனையோடு, இந்தியாவிலேயே முதல் முறையாக தொழிலாளர்களுக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட ஒரு மருத்துவக் கல்லூரி இந்த மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயேதான் அமைந்திருக்கிறது. அதேபோல, தமிழகத்தில் சிறப்பான ஒரு காசநோய் மருத்துவமனையான Sanatorium *மருத்துவமனையும் அந்தப் பகுதியில்தான் அமைந்திருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மறைந்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்தில் அமைப்பதற்காக 5 இடங்களைத் தேர்வு செய்து தாருங்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மத்திய அரசாங்கம் பரிந்துரை செய்யுமாறு கேட்டபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5 இடங்களை பரிந்துரை பட்டியலில் காட்டியுள்ளார்கள். அந்த 5 இடங்களில் இந்தச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை ஒட்டி இருக்கக்கூடிய இந்தப் பகுதியையும் சேர்த்துதான் மாண்புமிகு அம்மா அவர்கள் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்காக பரிந்துரை செய்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாச்சலம், உங்களுக்கு 2 கேள்விகள் கேட்க வாய்ப்பு இருக்கிறது. முதல் கேள்விக்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், நான் மற்ற உறுப்பினர்களுக்கு எவ்வாறு வாய்ப்புத் தர முடியும்?*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது துறையோடு சம்பந்தப்பட்ட விஷயம்தான். இந்த இடத்தில்தான் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எய்ம்ஸ் மருத்துவமனை பெருந்துறையில் அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, அந்த*

இடத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும்போது அதற்கும் சேர்த்து கூடுதல் பலமாக, இந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால், அது எய்ம்ஸ் மருத்துவமனைக்கும் பக்கபலமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஏற்கெனவே இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குண்டான முழுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான முத்திரைத் தீர்வை மட்டும் இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக முத்திரைத் தீர்வைக்குண்டான தொகையை வழங்கி, அந்தச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில்தான் 2.89 ஏக்கர் நிலம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான விலை ரூ.4 கோடி என நிர்ணயித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டுதான், அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறோம். அந்த நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்றுதான் நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இப்பொழுது Sanatorium பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. போதுமான அளவு சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மனதில் வைத்து, அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 14]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு கூடுதல் தகவலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இப்பொழுது மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு நீரைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். பவானிசாகர் அணையிலிருந்தும் நீர் ஆதாரத்தைப் பெற்று அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பயனடைந்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது கடுமையான வறட்சி இருக்கின்ற காரணத்தினால், இந்த இரண்டு அணைகளிலிருந்தும் எங்களுக்கு நீர் முழுமையாகப் பொய்த்துவிட்ட காரணத்தினாலே, அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் ஆழ்துளைக் கிணறுகளை மட்டுமே நம்பி விவசாயத்தை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், விவசாய மின் இணைப்பு கேட்டு காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்ற விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பை வழங்க வேண்டும். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே தமிழகம் மின் மிகை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஆனால், உடனடியாக அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்பு தர முடியாது. இருந்தாலும்கூட, விவசாயிகளுக்கு 10 மணி நேரம், 15 மணி நேரம் என்கின்ற கட்டுப்பாடுகளை விதித்து, அந்த அடிப்படையிலே விவசாயிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதிலே முன்னுரிமை கொடுத்து, வேகமாக விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுத்தால், அங்கிருக்கின்ற கடுமையான வறட்சியின் காரணமாகத் தவித்துக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு, அங்கு காய்ந்து கொண்டிருக்கக்கூடிய தென்னை மரங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதால், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அணைகளிலிருந்து அவருடைய மாவட்டத்திற்கு மட்டுமல்ல; மேட்டூர் வாய்க்காலிலிருந்து எங்களுக்கும் சேர்த்துதான் தண்ணீர் வருகின்றது. 140 ஆண்டு காலமாக இல்லாத வறட்சியாக இப்போது இருக்கின்ற காரணத்தினால், எத்தனை ஆழ்துளைக் கிணறுகள் போட்டாலும் தண்ணீர் கீழ்மட்டத்திற்குச் சென்றுவிட்டது. அதுவும் எங்கள் பகுதிகளில் எல்லாம் கிட்டத்தட்ட 1,500 அடியளவிற்கு கீழே சென்றுவிட்டது. அதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஆண்டு 40,000 விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதனால், ஏற்கெனவே மின் இணைப்பு கேட்டு பதிவு செய்த 40,000 விவசாயிகளுக்கு கொடுக்கப்படும். அதுபோக, tatkal–ல் இப்பொழுது 10,000 இணைப்புகள் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றோம். 5 H.P.–க்கு 2,50,000 ரூபாய், 7½ H.P.–க்கு 2,75,000 ரூபாய், 10 H.P.–க்கு 3,00,000 ரூபாய் என்று அறிவித்திருக்கின்றோம். Tatkal அறிவித்து 24–6–2017 அன்று cut–off date வைத்து, நாங்கள் அறிவித்த இந்த ஒரு வார காலத்திற்குள்ளேயே 10 ஆயிரத்திற்கும் மேலாக மனுக்கள் வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் தேவையிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப விவசாய மின் இணைப்பை அதிகமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆக, 40,000 மின் இணைப்புகள் இந்த ஆண்டு நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகராட்சி 2008 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. நம்முடைய தமிழினத் தலைவராலும், நம்முடைய தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகவும் இருந்த காலத்தில்தான் வேலூர் மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து பார்த்தீர்களென்று சொன்னால், overhead line சென்று கொண்டிருக்கின்றது. C.M.C. Road, மண்டித் தெரு ரோடு, Officer Line, அண்ணா சாலை போன்ற பகுதிகளிலெல்லாம் underground cable ஆக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு

2017 ஜூலை 14]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது* Corporation *பகுதியிலே அதுபோன்று முன்னுரிமை அடிப்படையிலே அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முதல் பணியாக, சென்னை* extension area*–ல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதி, மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தினால், அதை ஆய்வு செய்து, வேண்டுமானால், அந்தப் பகுதிக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 10 ஆயிரம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம்* tatkal *முறையில் வழங்குவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதிகபட்சம் 10* Horse Power*–க்கு 3 இலட்சம் ரூபாய் என்று அறிவித்திருக்கின்றார்கள். இந்த* Horse Power*–ஐக் கூட்டுவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

234 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் இருக்கின்றார்கள். இதில் பெரும்பாலானவர்கள் வாங்கமாட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு tatkal *முறையில் மின்சார இணைப்பு வழங்க முடியுமா? வழங்குவாரா என்று (குறுக்கீடுகள்) இலவசமாக மின்சார இணைப்பு வழங்குவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இதைத் தெரிந்து கொள்வதற்கு ஆவலாக இருக்கின்றார்கள். பார்த்தீர்களா, எத்தனை பேருடைய குரல் கேட்கின்றது? ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனிப்பாரா? சட்டமன்ற*

உறுப்பினர்களுக்கு tatkal முறையில் மின் இணைப்பை முன்னுரிமை அடிப்படையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த முதல் கோரிக்கை* tatkal scheme*–ல் 15* H.P. *வரை கொடுப்பார்களா என்று கேட்டிருக்கின்றார்கள். அதை மரியாதைக்குரிய உங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் கேட்கின்றபோது, கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றோம். நேற்றைக்கு முன்தினம்கூட அதைக் கொடுப்போம் என்று அறிவித்திருக்கின்றோம். அதற்கு நான்கு இலட்சம் ரூபாயாக அரசு நிர்ணயித்திருக்கின்றது. அந்தத் தொகையை கட்டிவிட்டால் 15* H.P. *வரை கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. தட்கல் திட்டத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே, திரு. தோப்பு வெங்கடாச்சலம், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னதைப்போல, ஏற்கெனவே நிர்ணயித்த 40,000 விவசாய மின் இணைப்பைக் கொடுக்கின்றோம். விவசாயிகளிடம் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கூடுதலாக 10,000 மின் இணைப்புகளை* tatkal scheme*–ல் கொடுக்க இப்பொழுது ஆரம்பித்திருக்கின்றோம். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 10,000 என்று அறிவித்த, இரண்டு, மூன்று நாட்களிலேயே அதிகமான மனுக்கள் வந்திருக்கின்றன.* Seniority *அடிப்படையிலே மின் இணைப்பு கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, அது நடைமுறையில் இருக்கின்றது. ஏற்கெனவே மின் இணைப்பு வாங்கியிருக்கின்றார்கள். அவர்கள் வாங்கியிருந்தால், புதிதாகத் தர முடியாது. வாங்காமல் இருப்பவர்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு*

2017 ஜூலை 14]

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

205—

பாதாள சாக்கடைத் திட்டம்

***4907—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இயக்கத்தையும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நின்று, அம்மா அவர்கள் செயல்படுத்திய அத்தனை நலத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.